செ.வெ.எண்: 27/ ஆகஸ்ட் நாள் : 12.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடிப் பணியாளர், அங்கன்வாடி உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள 269 அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களுக்கும் 227 குறு அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களுக்கும் 396 அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களுக்கும் தகுதியின் அடிப்படையில் நேர்முகத் தேர்வு நடத்தி இனச்சுழற்சி முறையில் நியமனம் செய்ய தகுதியுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடிப் பணியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும், 01.07.2017 அன்று 25 வயது நிரம்பியராகவும் 35 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். விதவை மற்றும் ஆதரவற்றோர் 40 வயதிற்குட்பட்டவராக இருக்கலாம். அங்கன்வாடி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்தவராகவும், 01.07.2017 அன்று 20 வயது நிரம்பியவராகவும், 40 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். விதவை மற்றும் ஆதரவற்றோர் 45 வயதிற்குட்பட்டவராக இருக்கலாம்.

விண்ணப்பதாரர் காலியாக உள்ள மைய ஊரில் வசிப்பவராகவோ அல்லது 3 கி.மீ தொலைவிற்குள் வசிப்பவராகவோ இருத்தல் வேண்டும். காலியாக உள்ள மையம் உள்ள ஊர் மற்றும் 3 கி.மீ தொலைவிற்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்படாமலிருக்கும்பட்சத்தில் அவ்வூராட்சியை ஒட்டியுள்ள 10 கி.மீ-க்கு மிகாமல் உள்ள ஊரில் வசிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும். தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரருக்கு மூன்றாண்டுகள் தளர்வு மேற்கொள்ளப்படும். (i.e partially arthopaedtically differently abled person who are capable of handling small children (below 6 years). காலிப்பணியிட மையங்களின் விவரம் மற்றும் இனச்சுழற்சி முறையிலான இடஒதுக்கீட்டின்படி விண்ணப்பம் செய்ய வேண்டிய இன வாரியான விவரங்கள் தொடர்புடைய வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் தெரிந்துகொள்ளுமாறும், மாதிரி விண்ணப்பப் படிவம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இணைய தளத்தில் www.icds.tn.gov.in வெளியிடப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவம் சம்மந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலகம் மற்றும் மாவட்ட திட்ட அலுவலகத்தில் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்) பெற்றுக்கொள்ளலாம். www.icds.tn.gov.in --லிருந்தும் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்துடன் கல்விச்சான்று, வயதுச்சான்று, இருப்பிடச்சான்றுக்கான ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் சாதிச் சான்று ஆகியவற்றின் நகல்களுடன் சம்மந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் 10.08.2017 முதல் 24.08.2017 வரையிலான அரசு வேலை நாட்களில் மட்டும் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. தபால் மூலம் விண்ணப்பங்கள் பெறப்படமாட்டாது. 24.08.2017-ஆம் தேதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**